16

ஸ்ரீராமஜெயம்

மன்மத சரித்திரமென்னும்

காமதகன

திருப்புகழ்ச்சிந்து

THE REGISTRAR ... AUG 1917 ... MADRAS

காவடிச்சிந்து வர்ணமெட்டு.



கும்பகோணம்-புஞ்சைவாசம்-கானவிகடகேசரி என்னும்
கே. வி. கதிர்வேல் பிள்ளை அவர்களால்
இயற்றியது

பெ. ஆறுமுக முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது.

(இதன் விலை) 1917 (அணா 2

Registered Copy Right.

சென்னை பூமகள் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

S. M. [signature]
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
ஜூன் மாதம் வருடம் 1983
செப்பனிட்டு முடித்த

திருச்சிறாப்பள்ளி ஜில்லா, ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமி கோனார் அவர்களால் இயற்றிய இராமாயணத் திருப்புகழ்ச்சிந்து, காவடிச்சிந்து வர்ணமெட்டு என்னும் எமது அபூர்வ புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்குத் தெரியப்படுத்துவது யாதெனில்:—

நண்பர்காள் மேற்கூறிய இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து என்னும் புத்தகத்தை ஷை கிருஷ்ணசாமிக் கோனார் அவர்களால் இயற்றப்பட்டு, பெரம்பூர் ஆறுமுக முதலியாராகிய என்னால் சுமார் ஆறு பதிப்புகள் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டு, உலகமெங்கும் பிரசித்தியடைந்து, யாவராலும் புகழப்பெற்று வருவதும், இதற்கென கிடைக்கப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்களின் பெருமையும் யாவருக்கும் தெரிந்தவிஷயமே; ஆகையால் எமது வியாபாரத்தின் பெருமையாலும், ஷை கோனார் அவர்களின் கவியை பங்கப்படுத்தவும் ஓர் எண்ணங்கொண்ட சிலர் புதிதாக ஸ்ரீமத் ராமாயண திருப்புகழ் என ஓர் "இமிடேஷன்" புத்தகத்தை அச்சிட்டு எமது வியாபாரத்தைக் கெடுக்க உத்தேசித்து அசுத்தமான பதிப்பாக அச்சிட்டு விற்று வருகிறார்கள். ஆகையால், ஷை இராமாயணத் திருப்புகழ் புத்தகத்தை வாங்க விருப்பமுள்ள நண்பர்கள் ஷை புத்தகத்தின் டைட்டல் பேஜின்மேல் ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமி கோனார் இயற்றியதுதானவென பார்த்து வாங்குவீரென நம்புகிறேன்.

117269

இப்படிக்கு,

பெரம்பூர் — ஆறுமுக முதலியார்,

நெ. 4, பெருமாள்கோவில் தோட்டம் 2-வது சந்து,

உ

ஸ்ரீராமஜெயம்.

மன்மத சரித்திரமென்னும்

காமதகன
திருப்புகழ்ச் சிந்து.

... FOR THE REGISTRAR ...
... AUG 1917
MADRAS

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

இதில்
லாவணி, எரிக்கிற ஒப்பாரி, எழுப்புகிற ஒப்பாரி
இதுகள் அடங்கியது.

இவை
கும்பகோணம் புஸ்தகஷாப்
காயண விகடகேசரி யென்னும்
கே. வி. கதிர்வேல் பிள்ளை யவர்களால்
இயற்றியது

ஷியூர் புஸ்தகஷாப்
கோ. சீனிவாச பிள்ளையின்
விருப்பத்தின்படி,
பெரம்பூர்,
ஆறுமுக முதலியாரால்,
சென்னை
மூஹரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

இதன் விலை] 1917 [அணா 2.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் மன்மத சரித்திரமென்னும் காமதகன திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டுக ளமைந்துள்ள புத்தகத்தை வெண்தமிழ் நடையாக கும்பகோணம் புஸ்தகஷாப் காயனாவிகடகேசரி யென்னும் வே. வீ சதிவேல்பிள்ளை யவர்களால் எழுதினதை பெரம்பூர் - ஆறுமுக முதலியாராகிய எனக்கு சகல சுதந்திரம் கொடுத்துவிட்டபடியால் இதை என் அனுமதியில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

பெரம்பூர்-ஆறுமுக முதலியார்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மன்மத சரித்திர மென்னும்

காமதகன

திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

வெண்பா.

காமதகன மதைகருதி வெண்தமிழ் திருப்புகழாய்
சேமமுடன் சிந்தாக செப்புதற்கு—மாமலர்சூட்
வல்லபையின் நாதா வானவர்போற் றைங்கரனே
சொல்லுக்கு முன்னவனே துணை.

விநாயகர் துதி.

பகாரியாலோதேக்கோ மெட்டு.

அருளதைத்தாரும ஐயா ஐங்கரனே
திருவருள்புரியவாரும் தாமோதரனே
தினம்தினம்நினைப்பேனே தும்பிக்கைகாரனே
அடிதாருதீரனே

ஆதிதனிலே நீதியாய்வந்து
பாதிமதியோன் பாலாவுந்தனின் (அ

மோழிகமேரும் நாதாமுன்வருவாய்
ஆழியில்அனை கட்டின அரிமருகா
ஆனையின்முகவனே அன்புடன்கூறுவாய்
மோதகபெருவாய்

மோகனவல்லபை பிராணனென்முன்னே
தானுவருவாய் காணவுந்தனின் (அ

மாரனின் கதை சொல்மனமகிழ்ந்து
வாரணபுராணங்களில் முந்தியிருந்து
வாசவர்விஸ்வாசருக்கு மென்றுமுகந்து
மலர்ப்பாதமேதந்து
மனதில்என்னாளும் உனதிசமுடி
கண்பெற்றிடவே நினைந்தேனேஉந்தன் (அ)

நூல்.

இந்திரன் சபை.

இந்திரன் வருவது.

திருப்புகழ் இசைந்தபேறு என்றமெட்டு.

ஆயிரம்கண்ணும் தவஷியர்புகழும் அமரேசன் பகவான்
அரியரனையென்னாளுந்துதி யிந்த்ராணிநேசன்
காயமழியா ரிஷிகள்தேவர்கள் புடைசூழ அந்த
கற்பகத்தருவை யுற்றசபையும் தான்வாழ
நேயமுடனே யஷ்டபாலர்கள் தான்போற்ற வெகு
நீதியாய்சந்திரர் சூரியர்தினமே தானேற்ற
மாயனை துதிக்கு நாரதமுனி வதிஷ்டரும் சிவம
மனமகிழ்ந்து உறைகுருனியாழனும் அயன்பேரும்

தேவேந்திரன் சபையிலிருப்பவரை கேழ்ப்பது.

தரு-பார்சி-தாளம்-ரூபகம்.

சபையோரே என்ற மெட்டு.

கொலுவமர்ந்தவரே கூறுவேன்கேள்
கொளுந்துதேயிதோ வெகுதனலாய் (கொ)
இதுவென்னவென்று யெடுத்துரைப்பீர்
இங்கமர்ந்தவரே யென்தன்முன்னே
யதுவிபரமே யரியசெவிடில் என்
ஆவியேபோகும் அமரர்களே (கொ)

இந்திரன் கேட்டவுடன் சபையிலுள்ள ரிஷிகளும் தேவர்களும் பதில் சொல்லுதல்.

எங்கேங்குசேன்றீர் என்றமெட்டு.

ரிஷி. கையிலேயீசன நிஷ்டைசெய்யுமிந்த
காணலாமிதுதானே
கடவுளின்விரதத்தை கெடுத்தால்காணல்
காணுதயென்கோனே

இந். இங்கமர்ந்தரிஷி வல்லோரேகேளும்
யீசன்தபமதனை நாம்
எவரைக்கொண்டு அழிக்கலாமதை
இயம்புவீரதனை

ரிஷி. மாயன்மகன்மாரன் மன்னனல்லாடும்
மற்றவரால்முடியாதே
உபாயமாய்ஐந்து மலர்க்கணையாலே
யொழிப்பான்நிஷ்டையதே

இந். ஆனவனையா ரோக்கியபுரஞ்சென்று
துரிதமாய்மன்மதனை
யோதியேநாமிங்கு மழைத்தோமென்றமே
யோடிவருவாய்தானே

தூதுவர்கள் ஆரோக்கியபுரம்சென்று மன்மதனிடம் சொல்வது.

தாஜூராஜ என்ற மெட்டு.

மதனவடிவு தீரனை மாரனும்சானே
யிதமுடனமர்ந்திட்ட சபையோர்க்கு வந்தனம் தந்தேனே
விதவிதமலரும் கரும்புவில்லும் வசந்தன்மந்திரியும்
[illegible]முடனேசந்திரகுடையும் தென்றல்பற்றவேரதமுடனே
அதன்[illegible]னேமோகம் கொக்கோகம் அருப்தி காலுவிலைகள்
போதிக்கவே
ஆதவமாதவன் பாலனும்பஞ்ச பாணம்கைப்புடனே
அருமைசபைவந்தேன் பெருமைபுகழ்கொண்டேன்
திறமைதனைவிண்டேன் நின்றேன் (மத)

மன்மதன் வசந்தனென மந்திரியிடம்
தேசவிசாரணை புரிவது.

சொல்லாமொழி என்ற மெட்டு.

மன். தேசவிசாரணை நேசமுடனேநான்
தெரியகேழ்க்குறேன் சொல்லுமே

வச. நேசமுடனே புரைத்திடுவேன்கேளும்
நீதியறிந்து வெல்லுமே

மன். அந்தணர்வேத முறைதவறாமல்
அனுதினமும் செய்துவாராரு

வச. சந்தோஷமாய் மறைநாலுமேயோதி
சரியாய்நடந்து வாருரே

மன். க்ஷத்திரியர்நித்தியமும் புத்திதீக்ஷணியமாய்
சண்டைக் கெட்டிக்காறரா

வச. எத்தனைசேனைகள் கத்திடிலதனை
விழுத்துமே கொல்லுவார்வீரராம்

மன். வைசியர்செய்திடும் வாணிபந்தானுமே
வழுவாமல் நடந்துவருகுதா

வச. வர்த்தகந்தன்னிலே விர்த்தியுடன்செய்து
வருகுறார் சரியாருமே

மன். சூத்திரர்செய்திடும் வேளாண்மைதொழிலும்
நேர்த்தியாய் நடந்துவருகுதா

வச. பாத்தியமுடனே கழனிவிளைந்து
பகுதிபணமும் கட்டுறார்

மன். மாதமும்மாரி பொழிந்துகுடிகள்
பயிர்கள்தழைத்து வருகுதா

வச. வேதமுறைப்படிமாத மும்மாரிமீதினில்
பெய்துவருகுதே

மன். ஆலயப்பூஜை அன்புடன்நடந்து
அடிக்கடியுச்சவம் நடக்குதா

வச. மால்அரன்கோவில் தினம்தவறாமல்
மகிழ்ச்சியாய் உச்சவம்நடக்குதே

மன். அன்னசத்திரம் பின்னமில்லாமலே
அன்புடன்தானம் நடக்குதா

வசு. அய்யனேயேழை பரதேசிதனக்கு
அகத்தியமன்று நடக்குதே

இந்திரனிடதூதர் மன்மதனிடம் சொல்லல்.

பார்சி தம்பி என்ற மெட்டு.

தூத. வந்தனம்மன்மத மகராஜராஜனே
வணங்கியேதந்தனம் அங்கஜயோகனே

மன். எங்குவந்தீர் தூதர்நீங்களே யெவ்விடத்தினில்
யிருப்போர்தாங்கள் பியம்புமுன்னாலே

தூத. அமரர்கோன் உந்தனையகத்தியமாய் வரச்சொன்னார்
அங்குமேவசிப்பவர் அனங்கனேகேளுமே (வந்)

மன். சொல்லுங்கள் நானும்வருகிறேன் சீக்கிரமாக
சோக்கியசபை விலாக்கியமுடனே (எ)

மன்மதன் தூதுவனிடம் வருவதாக சொல்லி ரதியிடம் செல்லல்.

ரதிக்கும் மன்மதனுக்கும் தர்க்கம்.

தோந்திசரிய என்ற மெட்டு.

மன். கேளடிபெண் ரதியே யிந்திரனிட
திருவிபதூது மொழியே சென்று
கேட்டுமே யிப்பதியே வருகிறேன் முகமதியே

ரதி. என்னவிசேஷமைய்யா அவசரமாய்
எழுந்துபோதீர் ஐய்யா எந்தனுக்கு
சொன்னால் அதுவும்பொய்யா யுரைப்பீர் பாணையா

மன். இன்னதென்று அறிந்து வருகிறேன்
யிப்போதேநான் தெரிந்து துடிக்கிறாய்
கண்ணே ஜாடையறிந்து சொல்லுறேன் சென்றுவந்து

ரதி. இந்திரன் சபையேகி சீக்கிரம்
வந்து அனுபோகி உரைப்பதே
தந்திரமும்மாகி செல்லுவீர் சீவிவேகி

ரதியிடம் விடைபெற்று இந்திரனிடம்மன்மதன்செல்ல இந்திரன் பரமசிவன் நிஷ்டையைக் கெடுக்க வேணுமென்று கேட்குதல்.

மன்மதனுக்கும் இந்திரனுக்கும் தர்க்கம்.

பார்சி.

மன். இந்தமொழிகூறத்தானேயிப்போது
ஆதர்களொப்பியே யழைத்திட்டார்
விந்தையா யீசன் தவத்தை வில்லாழிகாணழிக்க (இ)

இக். இப்படிநீர் சொல்லலாகுமோ
யிங்கிதமாய்க்கரூர சங்கரனுக்கஞ்சி
யொப்பிநீர்தபமழிக்கவே யோகசாபமவருக்குண்டு (இ)

மன். பெண்களால் அத்தவசை பேதிக்க
லாகாதோ கோதிகடாதை
யின்பமும்கொள்ளுவாரையாயீசனிடம்செல்லமாட்டேன் (இ)

இக். உன்னையன்றி வேறுதுணை
யுற்றவரில்லை சித்தஜனேஐயா
யென்னைவைத்து ஆதரிப்பீரே யிப்போதுகார்ப்பீரே (இ)

மன். கோபமுள்ள ருத்திரர்மேல்
கொடுங்கணைகளை விடவும்போகுமோ
பாபமது ஆகுமாகும் சாபமதுவிடுவார் தானுமே (இ)

இக். அஞ்சவேண்டாம் பஞ்சபாணா
ஆவியைக்காத்திட தாவிபருள்தாரும்
தஞ்சமுனதுபாதமே தயவதாகிரும்மையுமே (இ).

இந்திரன் முல்லை, சோகு, நீலோற்பலம், அலரி, மாதி என்ற ஐந்துகணை தான் வெல்லுமென்று சொல்லல்.

இந்திரனுக்கும் மன்மதனுக்கும் தர்க்கம்.

மாங்குஞ்சரியா என்ற மெட்டு.

இ. அங்குசெல்லுமே அங்குசெல்லுமே
அனங்கா அரன்தவத்தை யறகொடியிலழிக்க (அ)

ம. ஆகுமோஆகுமோ ஆகுமோசொல்லுமே

இ. அங்குசெல்லுமோ அ அ

ம. சங்கரன்செய்தபத்தை தானழிக்கமுடியாதையா

இ. அங்கஜனே யுன்னையன்றியே

ம. ஆவியும் போகுமன்றியே

இ. அருள்தர வேணுமையனே

ம. திருவருமழியுமையனே

இ. பெருமையை யடைவாய்முன்னமே

ம. பெரியவர் செய்வார்பின்னமே

இ. அங்குசெல்லுமே அ அ

இந்திரனுக்கு சொல்லியும் கேளாததால் மன்மதன் செல்வதாக சொல்லி ரதியிடம் வந்து கயிலைக்கிசெல்ல விடைபெற வருவது.

ரதி சென்ற நாயகன் மன்மதனை காணுமால் பாங்கியிடம் சொல்லுதல்.

ஆபரணங்கள்கண்டேன் என்ற மெட்டு.

சாமிவரக்காணேனே யென்றுரை
வரக்காணேனே யென்செய்வேன் நானே (என்)

கேமமுடனேதேவ சபைசென்றுவாரேனென்று
கேயனும்சொல்லி போயினாரேதான் கோமாகுதே (என்)

சொன்னதெல்லாம்போச்சே சோகமிகவுண்டாச்சே
சோருதேநெஞ்சம் மாரனின்வஞ்சம் சொல்லடிகொஞ்சம் (எ)

தூதர்சொன்னவார்த்தையை போதாமல்போனாரே
ஏதுநான்செய்வேன் எவரைநான்வைவேன் ஓதடிமெய்யை ()

ரதி இன்னம் பாங்கியிடம் அங்கஜனைக் காணாமல் பாடுதல் தர்க்கம்.

மாணுமதுரையிலே என்ற மெட்டு,

ரதி. பாங்கியரேநீங்கள்சென்று யென்
பத்தாவையழைத்துகொண்டு
ஓங்கி நடைநடந்து யென்முன்
ஓடிவாடி யரைநொடியில்

பாங். அழகில் சிறந்தவளே அரனார்
திருமகளே
தழுவும் ரதியினளே யிப்போ
தயவுவை யழைத்துவாரேன்

ரதி. கொற்றவன் றாவின்றசைப்
கொதிக்குதடி யென்மயக்கம்
பக்கமிருப்பவரேசென்று
பார்த்துவாங்க நீங்களிப்போ

பாங். போய்வாரேன் பெண்மணியே
புலம்பாதே கண்மணியே நான்
வாய்வேகம் மனவேகமாய் அந்த
வாணவர் தன்சபைக்கி

ரதி இன்னம் சகிகளிடம் சொல்லுதல் தர்க்கம்.

பாளைவாய்கமுகில் என்ற மெட்டு.

ரதி. மாதேபெர்தன் மாரன்தன்னை பேதோயின்னம் காணேனடி
ஆதோயெவர் செய்திட்டாரோ அறியேனே அடி
யிப்போதே அதைநானுமே தெரியேனே

பா. விண்ணவர் தூதனுப்பி மன்னனையழைத்துசென்றார்
என்ன நடந்ததோ அறியேனம்மா நான்
இன்னமும் தேடிபோறேன்விடு சும்மா

ரதி. நீங்குகள் யேதுமேவுண்டோ பாங்கியேநீசொல்லடியே
நீரீனைப் போதாகாலும் பார்ப்பேனே யின்று
வாரேனென்ற சேமதை காப்பேனே

பா. வந்திடும் சேமுமாக்கி வழியதை தன்னைப்பாரும்
அந்தமுள்ள உத்தவின்கண் ணானாலும் உனக்கு
தந்திவோர் முத்தமும் மனனாலும்

மன்மதனைக்கண்ட ரதி பாடுதல்.

வாருமன்னு என்ற மெட்டு.

வாருமதனு உட்காரு மதனு நீர்
வானவர்-காடுசென்ற வகையுமென்ன (வா)

தீரவீரனே மாரூரனே நாம்
தெரிவிப்பீரே விபரம் அறிவிப்பீரே (வா)

சானசர்ச்சனர் வேதமோதுமுனிவர்
ஏனுடைரைத்தார் எதற்காகவழைத்தார் (வா)

தேவேந்திரன் என்னை பரமசிவன் நிஷ்டையைக் கெடுப்பதற்காகப் போகச்சொன்னார் அப்படியே போகிறதாய் ஒப்புக்கொண்டுவந்தேன் விடையளிப்பாயென்று ரதியைக் கேட்குதல்.

ரதி பரமசிவன் தபத்தையழிக்க போகவேண்டாமென தடுப்பது.

பட்டாபிஷேகம் என்ற மெட்டு.

ரதி. பொன்னுலகையாளும் மன்னவனழைத்து
யிப்போருக்கோயுனை யானாக்கிவைத்தான்
போகாதே பிராணநாதா வீணுய்சாகாதே மலர்ப்பாதா
போற்றிசெய்வேன் சேத்திபதாய் பாத்தியகாரியாலும்

மன். மின்னரசேயிந்திரன் யென்னாருதினால்
மெத்தவுமே பலவானவனோ
அவன் வித்தையறியேனோ வரும் யுத்திதெரியேனோ
சித்தினியே பெண்பத்தினியே நான் சென்றுவருவேனே

ரதி. இன்னவழிசென்றால் ஈனம்வருமென்று
யெண்ணுமலே பத்மாசூரனடைந்த
சேதியேநீர் அறிவீர் அந்த நீதிதான்தெரிவீர்
என்னயகனே என்துரையே என்னவுனக்குரைப்பேன்

மன். பத்மாசூரனாலே பாமன் ஓடிப்போன
பவுசையறியாமல் பேசராய்பெண்ணே
அவசிய மானபெண்கண்ணே
பேதையரே பாவையரே பெருமையாய் வாக்கருள்வாய்

ரதி. அயனரிதேடியே ஆண்பாதமதை
அலுப்பாயிருந்தார் அதைநீயறியீரோ
ஐயன்திரிபுரத்தை சிரிப்பினால் மெய்யன்எரித்தவித்த
அன்புள்ள பெண்கணவா அகலவும்வேண்டாம்சொன்னேன்

மன். எப்படியாகிலு மீசன்தவமழித்து
பிட்சணம்வருவேன் பட்சமுள்ளவந்த
பிச்சைக்குறியவனே பெண்கள் மெச்சுமரதிமயிலே
தேவியரே யேகினாலும் மேனியழித்துவாரேன்

ரதி இவ்வளவு சொல்லியும்கேளாததால் மன்மதனுக்கு
இன்னும் சொல்லல்.

சப்த தனிதல என்ற மெட்டு.

ரதி. எந்தன் துரை நீரும்போக புந்தனுக்கு விர்த பெண்ணும்
விந்தவளை யெந்தனிடம் சொல் சொல் சொல்
சந்திர சடாதரன் சங்கரன்

மன். சுந்தரியே நீயுமிங்கு சந்தோஷமாய் தானிருந்து
அந்தமிடம் சென்றுவர சொல் சொல் சொல்
ஐந்து கணையினால் வாட்டுவேன்

ரதி. அதிகரிக்கா நடனஒய்யார யங்கஜ
சதுர்வீரா கில் கில் கில்
ஐயனே பாதம் போற்றினேன்

மன். தோகைமயிலே சித்திரரேகை குயிலே
விசித்திர தேவியரே யென்தன்
மொழி கேள் கேள் கேள்
தோஷமேவருது சொன்னேனே

ரதி. இந்திரனுலே நீயும் யுந்தன் தேறே கயிழ்ந்து
சிந்தை கலங்கபோரீர் தான் தான் தான்
யிப்போது மொழிந்தேன் கேளுமே

மன். ஐந்துகணைதொடுத்து யரன்தவமே கெடுத்து
அன்பாய் புகழ்நாட்டுவேன் பார் பார் பார்
பாவியே ரதி தேவியே

மன்மதனுக்கும் ரதிக்கும் தர்க்கம்.

லாவணி சுதுர்த சந்தா துனை என்றமெட்டு.

ரதி. போகவேண்டாமென்று மிக சொன்னேன் சொன்னேன்
மர். பூவையரே தடுக்கவேண்டாம் கண்ணே கண்ணே
ரதி. சாகரர்ள் வந்ததோதான் முன்னே முன்னே
மன். சரிதான் நீ நடவடிக்கை தான் பெண்ணே பெண்ணே
ரதி. மோக வொய்யாரனே
மன். மொழியுமினியத்தேனே
ரதி. சோகம்வருதே கோனே.
மன். சோம்ப லென்றடிமானே
ரதி. வேகமாய்ப் போகலாகாது சொன்னேனே
மன். தேவியரே யேனே யிந்தவாது வாது
ரதி. தேவேந்திரன் செய்தானே சூது சூது
மன். ஆவலாக போகவேநீபோது போது
ரதி. ஆகாரிசெய்வதெல்லாம் வாதுவாது
மன். பாவியே பாதம்தஞ்சம்

ரதி. பண்ணுதே யிந்தவஞ்சம்
மன். சேவிப்பேன் கேளுகொஞ்சம்
ரதி. சித்தம்வைக்க வேண்பஞ்சம்
மன். தேவியேதமிக்காதே நீமாய்போகபுஞ்சம் (போ)

மன்மதனுக்கும் ரதிக்கும் தர்க்கம்.

ஷாகைவாலா என்ற மெட்டு.

ரதி. போகவேண்டாம் தொடைமதியே
மன். பெண்ணேகேழ்ப்பாய் அடிரதியே
ரதி. வேகமாகவேபதியே
மன். வெற்றியுடன் யித்தருணம்
நற்றுவேன் பாரடிதேவி (போ)

ரதி. அரனர்செய்யும் கல்தபஸை
மன். அறிவேன்பாரடி யவர்பவஸை
ரதி. அவரைபெரிப்பார் அக்கிமிஸை
யறகொடியில் தவமழித்து
அன்னமேநான் வாரேனடி (போ)

மன்மதனுக்கும் ரதிகரும் தர்க்கம்.

பசளகிற என்ற மெட்டு.

ரதி. என்னையின்று வைத்துபோக
யென்னமுனக்குண்டாக யீசனிடம்செல்ல
ஆகாதே வெறுநீதே (யெ)
மன். கன்மூன்றுடையோன் செய்யும்
கருணை தவமழித்து
பெண்ணேதான் நான்வருவேன்
பேசாதே போறேனென் பேசாதே (க)
ரதி. அழகில் சிறந்தமென்ன
ஆண்டியிருந்தமென்ன

ஆளைப்பிரியவே யாகுமோ
வீண்போகுமோ (௭)

மன். வருத்தமடைவதேனோ
வானவர்க்குவுபகாரன்
கருத்தாளி காணும்சென்று
வாறேனே மொழிபீறேனே (௮)

ரதி. எத்தனைவித முறைத்தேன்
சித்தசனே மீறி போனீர்
பித்தன் மென்ன செய்வாரோ
அறியேனே யதை தெரியேனே (௯)

மன். அஞ்சிமலர் பாணத்தாலே
அலங்கோலம் செய்துவாறேன்
வஞ்சியேயிடை யிருவாய்
வாடாதே யிசைபாடாதே (௰)

மன்மதனுக்கும் ரதிக்கும் தர்க்கம்.

லாவணி.

ரதி. மன்ன மன்னர்கள் புகழ்விண்ணவருமகிழ்
மார ஒய்யாரதீர மலர்கணை கெம்பீரா
மால்மகிழ் குமாரா யுன்
மர்து காணுமே போறுவதேசிராய்
மலர்பாதமே நீ தாராய்
மங்கைக்கேத்த யதிவீரா
சின்னவயதினில் யென்னைவிட்டு நீயும்
சிவனிடம் போகாதே யங்கு யேகாதே
அதுவேவரும் தீதே சென்றால்
செய்வார் சிவன்வாதே வெகு

மன். கன்னிரசமெழுகே யுன்னிதமான பெண்ணே
கடிகினில் சென்றுவாறேன் காணும் வெகு தீரன்
இப்போதிங்கு யிறேன் நீயே
கவலைதனையேவிடு யலையசெய்யாதே சான்போறேன்
கண்கலங்காதே தேனே
கண்ணியே சென்று காணே

சென்னியில் கெங்கையணி சிவனார்
செய்யும் தவத்தை சேதித்து யிப்போதானே
அடியே கேளுமானே வந்திடுவேனே
செப்பினேன் சேயிழையே தானே

ரதி. அஞ்செழுத்திலுள்ள பஞ்சாட்சர கடவுள்
யவரோ யாருமையா சொல்லுவேன் கேளுமெய்யா
யிதுவுனக்கு பொய்யா யரிவீரே
பஞ்சபாண மலர்கையா
ஆதரிப்பீர் ஐய்யா
ஆசையால் மனவையா
கெஞ்சினேனே புத்தன் தஞ்சமலர்
பாதம் வஞ்சிரதியும்தானே இப்போ
சொன்னேனே இனிய கோமானே
கிருபையே தருவாய் யெனக்கு தானே

மன். தென்றல் ரதமேரி யின்று செல்லுவதாலே
ஒன்றும் வராது கண்ணே யடியே நாளும்
சொன்னேன் புத்தனிட முன்னே தேவியே
செல்லவிடை தாடி பெண்ணே
தேவலோகவிடர் தன்னே
தெரிந்து ஒழித்துவர யின்னே
மன்றுளாடிய சிவன் ஒன்றும்
செய்யவேமாட்டார் சென்டுமல்லிகை முல்லை
செய்பாயிந்த தொல்லை தேவிமனம் வல்லை
தெரிவித்தேன் கேளடி யென்சொல்லை.

மன்மதன் விடைபெற்று மந்திரியும் தானும் வரும்போது வழியில் சகுனம் காண்பது.

ராகம்-பிலகரி-தாலம்-ரூபகம்.

மந். கண்ணுக்குமுன்னே அபசகுனம் காணுதே மன்னவனே
மன். பெண்சனிவரும்பேதோன்றுக்கும்
அஞ்சாதீர் மந்திரியே

மந். கழைபாரும் கட்டுசோறு முன்னுறுமா மன்னவனே
மன். நகரத்திற்பக்ஷிகள் பெருகும் புள்வழித்தோ மந்திரியே
மந். வேதியன் ஒருவனும் விசனைமுன் வாரானே மன்னவனே
மன். வேடியேதுமுண்டு வேகமாய் போறார்கள் மந்திரியே
மந். தவசியும் தட்டானும் தானேயெதிர்வாறான் மன்னவனே
மன். அவசியமிக்காரன் ஆரிடம் செல்லுவேன் மந்திரியே
மந். காகமுஞ்சேறுமொன்று கட்டிபுரளுதே மன்னவனே
மன். விவேகமில்லாமலே வீண்வார்த்தை சொல்லாதீர் மந்திரியே
மந். பொல்லாதசகுனங்கள் போகவொண்ணுதையா மன்னவனே
மன். எல்லாந்தெரிந்துநீ யேனிப்படி சொல்லுறாய் மந்திரியே

இப்படி சகுனத்தைத் தடுத்து கயிலாசம் சென்று நந்தி முதலியவற்றை கண்டு பேசி ஈஸ்வரன் மீது பாணமெய்வது.

வந்தவேளை நல்லவேளையிது என்ற மெட்டு.

எய்குறேன்பாணம் ஐயன்செய்யு[illegible]
தபமெல்லாம் இன்றுகலைந்துபோக [illegible]
ஐயன்முகம்கோப கணைகள்விழுந்திட
கருணைக்கோணிவிழுந்துசல்லாய் (எ)

தாம்மைமலர்கணைவிடுத்தேனே நல்ல
தாமதமில்லாமல் தொடுத்தேனே
பூமகன்காரணன் புத்திரனும்புகழ்
சேமசிவன்தபம் இல்லைமக (எ)

மாப்புகணையை விடுத்தேனே அது
மாசிமாரிவிழ தொடுத்தேனே
சாம்பசிவன்செய்யும் தவநிலையைக்கலைத்து
சர்வதேவர் முனிவர்புகழுடைய (எ)

அசோகுகணைகளை விடுவேனே நல்ல
அரும்புமுல்லைக்கணையும் தொடுத்தேனே

அரன்செய்யும் கிஷ்டையையான் கெடுப்பேனே
அருகினிலிருப்பவர் மகிழவே (ஏ)

ஈஸ்வரனானவர் யார் இப்போர்க்கொற்ற கொடிய காரியம் செய்கிறான் என விழித்து நெற்றிக்கண்ணால் பார்க்க மன்மதன் எரிந்துவிடுகிறான்.

மன்மதன் இறந்துவிட்டதாக ரதி தோழியிடம் கனவுகண்டு பிரலாபிப்பது.

இராகம்-புன்னாகவராளி-அடதாளம்.

என்னசெய்வேன் பாங்கிகளே பித்தர்வருமோ நான்
சொன்னதை கேளாமல்சென்று சூதால்மாண்டாரே (ஏ)

அத்தன்அத்தன் தவசித்தியன் பித்தனின்கண்ணாலே
மஞ்சள்குங்குமமிழந்து மண்ணிலிருப்பேனோ (ஏ)

பஞ்சபாணன் கட்டினதாலி பாரிலிருப்பேனோ
நெஞ்சநொந்து அஞ்சாமல்தான் அஞ்சிமலர்கொண்டு (ஏ)

ஆறுகுளம்தன்னிலேயிலே ஐயோநான்விழுவேன்
பாரிலென்ன பெண்க்குசகம் பதரியேயழுவேன்
பாவிபர்வியேகின்னயே தேவியென்னசெய்வேன் (ஏ)

ரதி புலப்பல்

அரிச்சந்திரவிலாசம் நீதிநெறியுணர்ந்த என்ற மெட்டு.

சின்னவயதினில் விண்ணவரோடுவந்து
சிறப்பாய்தாலிகட்டின பிராணநாதா இப்போ
இன்னவிதியென்று எழுதினானோ
அறியேன் பிராணநாதா
இந்திரனாதனுப்பினான் ஈசன்தவமழிக்க
வென்றுசொன்னீரே பிராணநாதா

மித்திரன் அனுப்பிப்போ வந்தனைக்கொல்லவந்த
யெமன்று துவாக்கதே பிராணநாதா
பெண்புத்திதன்னையே புருஷர்கேட்பாரோயென்று
போய்மடிந்தீரே பிராணநாதா
பெண்சொன்னவார்த்தை பிசகாமல்முடிந்ததே
பிரியந்தனையொழித்தீர் பிராணநாதா
என்றும்பிரியேனென்று மன்னும்பின்னுமறிய
யேதோசொன்னீரே பிராணநாதா
இன்றுவுமைப்பிரிய யேதோவிதிசமோ
யானும்தெரிகிலேன் பிராணநாதா

ரதி புலம்பல்.

ஆருமற்றபரதேசி என்ற மெட்டு.

அய்யோவென் பிராண்நாதன் மடிந்தாரே
அமரர்கள் துதால் உயிர்விடுத்தாரே (அய்)
செய்வதுஎன்ன யினிபார்க்கிலே நான்
செப்பியுங்கேளாமல் போனதாலே (அய்)
உலகுன்னபெண்கள் யெல்லாம்பழிப்பாரே நல்ல
உத்தமியென்னைகண்டு யிகழ்வாரே (அய்)
செத்துமடிந்திடுவேன் யானிருக்கேன் என்
பத்தாவைவிட்டு பெண்களிருப்பாரோ (அய்)

ரதி சொல்லும் ஒப்பாரி.

அத்தர்புனுகுஜவ்வாதணியும்திருமேனி
அனல்பற்றிவெந்ததோ அழகுதுரைமன்னவர்க்கு
சாந்துஜவ்வாது தரித்ததிருமேனி
தணல்பற்றியெரிந்ததோ தர்மதுரைமன்னவர்க்கு
மாணிக்கமுத்தாரம் மணிந்ததிருமேனி
வாடியெரிந்ததோ வாஞ்சையுள்ளமன்னவர்க்கு
ஆசையாயென்னை யழைக்கும்திருவாக்கு
அடங்கியேவெந்ததோ அழகுதுரைமன்னவர்க்கு

மாரடிப்பு.

பாரடி சேடியே பாவிதலைவிதி
மாரடித்துமே மண்ணிலே விழுவோமே
பாபமே. பாபமே பாபமே

ரதியழுதுகொண்டு தேவரிடம் சென்று முறையிடுதல் தர்க்கம்.

மார்க்கத்தில்கண்ட என்ற மெட்டு.

ரதி. முப்பத்துமுக்கோடிதேவர்களே அந்த
முகுந்தன் மகனைக்கொன்றீரினி

தேவர். எப்போதுமில்லை பிறப்புமவனுக்கு
யெழுப்பிதருவோமன்றி

ரதி. தர்மிகளர்களேமன்மதனைநீர்
தந்திரமாயழைத்து ஈசன்

தேவர். தவநிலையைகெடுக்க வரவழைத்தே
யன்றிதயவல்ல மனம்பொறுத்து

ரதி. அக்கஜூப[...]யழைத்து கொன்றீர்களே
இருமோ வி[...]மோசம் அவன்

தேவர். அரன்மேல் கணைதொடுக்க அதிபலவானென
அழைத்தேநேசம்

ரதி. ஈசன்தவமழிக்க மிகப்பலவானில்லையோ
யென்கணவனல்லால்

தேவர். எய்வேன் அஞ்சிமலர் செய்வேன்தவமழிக்க
யேகுதேனெனசொல்ல

ரதி பாங்கிகளுடன் கைலாசம் போகும்வழியில் பிரலாபிப்பது.

லாவணி.

பாங்கியரேநானும் ஓங்கியுரைத்தமொழி
பாவிகேழ்க்காமல்சென்று ஆவிதுறக்தாரின்று
ஏங்கியெந்தன்மனம் தாங்கொருதடி
எப்போ அவரைபார்ப்பேன் அவர்வாயால்
செப்பமொழிகேழ்ப்பேன்
திரிபுரத்தைசிரிப்பாலெரித்த சிவனென்றுதெரிந்து
அவரும்போனார் அங்குமே யெரிந்துசாம்பலானார்
மஞ்சள் திலதங்கள் விஞ்சியேகாணிழந்தேன்
பஞ்சபாணன்மருக்க நானும்தாலியறுக்க
மித்திரன் ஆதாலே சுத்திரனையிழந்தேன் வந்ததுஅவகேடு
எத்தனைவிதத்திலும் எடுத்துஎடுத்துசொல்லி
யிப்படிபோகலாமா ஜெகதீசனால் சாகலாமா.

ரதி கைலாசம் சென்று ஈஸ்வரன் பாதத்தில் அடித்து மோதி விழுந்து அழுது கேழ்ப்பது.

மஞ்சகீர் என்ற மெட்டு.

ஆதியே பரமசிவமே அடிபணிந்தேன் முடிகுனிந்தேன்
ஆண்டிடுமெந்தனை தவமே என்
அங்கஜன்மலர் திங்கள்முடிதூவ
சங்கரனேசீர் பங்கம்செய்தீரே
ஆருமோ உலகினில்தானும் நாயகனையுபாயமுடன்
அரைக்ஷணத்தில் எழுப்பிடவேணும்
வேடன்கா லதையும்பட்டீரே தொண்டனின்பிள்ளை
கொண்டுமேகறி வேணுமதானுமே யுண்டீரே
வேலனையீன்ற காலகாலனே
நானெண்பத்தாவை பின்னுமேயெழுப்புமே
வேறேகெதி புன்னைத்தவிற
யெந்தனுக்கு சொந்தமுடன் கிடுகிரேநான் நற்கெதிபெற

ஈஸ்வரன் ரதிமீது கருணைவைத்து மன்மதனை
யெழுப்பி தனக்குமாத்திரம் ரூபமாகவும் மற்றவர்
களுக்கு அரூபியாகவும் இருப்பானென்று
இருபேருக்கும் ஆசிர்வதித்து அனுப்புதல்.

ரதியும் மன்மதனும் ஆரோக்கிய புறம் செல்லல்.

வங்காரமார்பி என்ற மெட்டு.

சிங்காரமாய் மாறனும் சேயிழை ரதியுடனே
திங்கள் கொடைபிடித்து சென்றார்கள் தன்னகரம்
உறங்காத வானவர்கள் ஆசிர்தனைபெற்று சென்றார் யிருபேரும்

கெங்கையணிந்தயர்ந்த திங்கள்சிறம்தரித்த
மங்கையர்பாகனானமகாதேவர் தன்னருளால்
ஓங்கவே தென்றல்தேரும் யோடவே வேகமதாய்
சென்று இருபேரும்

தங்கமுடிசிகரம்தானேந்தி மார்பினிலே
வங்காரவயிரகண்டி சரப்பளிபதக்கமுடன்
துங்ககரும்புவில்லும் தூண்டும்மலர்கள் ஐந்தும் கைக்கொண்டு

எங்கும்புகழ்ந்தா.. யிவரைமதித்திடவே
மங்கையர்களெல்லாம் மனதில் நினைத்திடும்
அங்கஜராஜனை யினவோரும்போற்றிடவே
யாரோக்கிய புறம் சென்றார்

மன்மதன் சிறப்பு ஒப்பாரி.

உலகம்புகழும் மதனார்கலவி ரதியின்கலனார்
உத்தமனார் சித்தசனார் சத்திநெறிவித்தகனார்
உல்லாசமாங்கலவி சல்லாபமே நிலவி
உத்தண்டமாகநின்று சித்தண்டமேவி யின்று
உயர்பஞ்சமாணமதால் அயர்வின்றி யோகமதால்
உயிர்கள் யுகந்தழைக்க செயங்கொண்டுதான்களிக்க
உப்பரிகையில்புகுந்து சப்ரமஞ்சத்தே யிருந்த
உண்மைதனிலேயிருந்த வண்மைமொழியே தொகுந்த

உத்தமியோடுசேர்ந்து சித்தங்களிகூர்ந்து
உபரியருபதினான்கு யபரிமிதமாயோங்கு
உன்னிதலீலைவிதம் சன்னதமேவிக்குவிதம்
உறைபாடிமெய்யுகந்து கறைந்தேடிமேவிவந்து
உன்னழகுகிஞ்சகமே யென்னசொல்வேன் தனசகமே

பரமசிவன் நிஷ்டை ஒப்பாரி.

சித்தருவமானசோதி கர்த்தனுலகமும்மாதி
சித்தாந்தமானவான பாதாந்தமோனஞான
சிற்சுகந்தவாரி சச்சிதானந்தகாரி
சிவனென்றுமாகிநின்று பவசாகரங்கள்வென்று
சிகரகயிலாயமலை பகரவரிதானுமிலை
சிறந்தமணிமண்டபத்தில் நிறைந்தவருள்கொண்டகத்தில்
சிதாகாசமானபரன் சதாகாலமேவிபரன்
சிங்காதனபீடமீதுயெங்கோனிருந்து யாளும்போது
சிவமறையும்போதி நால்வர்ஜனகாதி
செய்யும்முனிவர்வந்து ஐயனடிபணிந்து
செம்மான்மழு தரித்தகையன் யெம்மாதருளுமெய்யன்
சிந்தைநிலைக்குயாகம் சுந்தரவகல்லயோகம்
செய்துகெதியடைய மெய்யனேயுன்னுடைய
சிந்தைதயிறங்கருள்யென்றார் சந்தமொழிகேட்டுநின்றார்
சிக்கென்றுயெழுந்திருந்து யக்கைகலையில் பொருந்து
தென்னாலிலைவடவாம் கொன்றூமடிநிழலாம்
சேர்ந்துமுண்டகாசனத்தில் பார்த்திடகைமார்பீடத்தில்
சேர்த்துசழிமுனையை பார்த்துபழினையை
சேர்க்கும்கொடியமலம் நீக்கும்யடிகமலம்

மன்மதன் யெரிகிற ஒப்பாரி.

ஆரோக்கியபுரத்தி லரசாளுமன்மதனார்
பாரோர்கள்தேவர்களும் பற்றியேதான்புகழ
தென்றலிரதமும் தேர்மேல்மச்சகொடி
கொண்டுஐந்துபாணமும் கூசாமல்தானிருக்க

மங்கைரதியும் மன்னவனுமாறனுமே
என்றும்புகழ்த்துதிசையுடனே வாழ்கையிலே
இந்திரனார்தேவர்முதல் விசையசிம்மாசனத்தில்
சிந்தைதயிலுவருத்தி செப்பினான்முனிவரிடம்
ஆராலேயிக்கொடுமை யானதுதேவர்களே
கோரமெய்த்தனுக்கு நிகழ்த்துவிரிப்பொழுது
சங்கரனார்நிஷ்டை தானேபுரிவதினால்
இங்கேயெரியுது யென்செய்வேன்யெங்கோனே
இந்தத்தவமழிக்க யெவராலேயாகுமோதான்
அந்தகல்யாமானை யரிவிப்பிசெந்தனிடம்
ஆரோக்கியபுதமாறனும் அங்கசனே தான்தவிர
வேறேயொருவராலும் வேள்வியழியாது
அதுவனைவிட்டு துரிதமுடன் தானழையும்
அப்போது தூதனும் அவசரமாயோடிவந்து
வணங்கியேமாறனுக்கு வாய்பொத்திநின்றுமங்கே
வானவர்க்கரசனும்மை வரச்சொன்னாரென்றுசொல்ல
என்னவிசேஷ மெந்தனையேனழைத்தார்
மன்னவரும்கேழ்க்க மதியுள்ள தூதுவரும்
சாம்பசிவன்செய்யும் தவத்தைபேதித்திடவே
ஆம்பல்முல்லைமலரால் அங்குகணையாலே
வாருமென்றுஅழைக்க வடிவுள்ளமன்மதனும்
விசுவாசமுடனழைத்தீர் விண்ணவர்தூதர்களே
வாரேனென்றுசொல்லி வந்தாரதிக்குமுன்னே
அந்தப்புறத்தில் அழகுரதிமுன்சென்று
வித்தையுள்ளயிந்திரனிடம் வில்லாதிநான்போறேன்
ஐந்துகணையாலே அரனார்தவமழிக்க
போகாதீர்என்கணவா பொல்லாதவர்எங்கள்பிதா
ஆகாதகாலத்தால் அவசரப்படுகிறீரோ
திரிபுரத்தைமுக்தி சிரிப்பாலெரித்தவரே
அரிபாலுங்காணாத ஐயன்பரமசிவன்
செத்துமடிக்கிடுவீர் சிவனிடம்போகவேண்டாம்
பத்தினியென்வார்த்தை பாவியேதள்ளாதே
தேவசபைக்கி நீரேபோகவேண்டாம்
என்றுரதியு மிருந்துபுலம்பையிலே

ரதிக்கும் மன்மதனுக்கும் தர்க்கம்.

ஈரடி ஒப்பாரி.

ரதி

சாசுகுணமேயிருந்த ரதிமுன் பாசவந்த
தையல்மனைத்தேறி செய்யமொழிகூறி
தாமோதரன்மகனே காமாவென்காயனே
சாயிரீர் அங்கு செல்லவேண்டாம்
சாம்பசிவன் வேள்வியதை நீண்ட
சாதித்துநின்றேனையா சேதியைக்கேளுமெய்யா

மன்மதன்.

அணைக்கன்பினைக்குமயிலே அன்புள்ளரதிக்குயிலே
ஆதிசிவன் தபசை சோதித்து வருவேன்பரிட்சை
அன்னமேநீயிங்கிருப்பாய்மானே
அங்குசென்று நான்வருவேன் தானே
ஆதரிக்கதேவர்களை யருள்புரிவார்வாக்குகிளை

ரதி.

என்னமொழிசொன்னீர்நாதா வெனக்குகத்தமதனபோதா
சென்னியில்கெங்கையணியும் சிவனிடத்தில்போகவேண்டாம்
முன்னவர்க்குமுப்புரத்தை தானெரித்தஐயன்
முக்கண்ணுடைய அந்த மூர்த்தியாமெய்யன்
இன்னவள்வார்த்தைதன்னி செல்லாதேநீருந்துள்ளி

மன்மதன்.

போகமெனவேசொல்ல நீதியல்லவேசெல்ல
ஒத்தாசையாருமன பிதாவிபோமேம்மினம்
உத்தமியேபெண்ணே மிர்தவேனே
சித்தம்பொருத்தி யுரைக்கநானே
சீக்கிரம்வருவேனடி பாக்கியமுடனேபோடி

117289

ரதி.

காதாவென்னைத் தனியேவிட்டு தானுகவேமலைசேர்ந்திட்டு
காகா[illegible]ணன்தபத்தை வாகாகபோருமித்தை
ஞாயமா[illegible]ர தீதாலுரைஐயா
மாயவனூர [illegible]ள்மயிழசெயா [போ
ஆ[illegible]துசொல்லேனேயோ போகாதேயென்வார்த்தைபொய்

மன்மதன்.

செயிழையோதிமாதே யோசாமல்புகலுவதே
சென்றுமேமேரில்நின்று வென்றுமேஜெயங்கொண்டு
மெய்யனென்று சொன்ன அடிமானே
தய்யமலர்க் கணையால்தானே
மேலவரைகிளர்ந்து கொண்டு ஆவதைகண்டிருநின்று

ரதி.

கொன்றையுள்ளகாதனுக்கு விண்டுசொல்லபெர்தனுக்கு
கூடுமோதக்கருத்தும் நீபோபோகம்பெருத்தும்
சென்றுமலர்வாளி தொடப்போமோ
இன்றுதனியாய் யிருக்கலாமோ
தண்டஞ்செய்வேனுர்தன் பாதம்தாள்பணிவேனேநிதம்

மன்மதன்.

பணிந்துடைரைத்தசோதே பாயணிடயிப்போதே
பஞ்சபாணத்தினலே வஞ்சித்துஅவர்முன்னலே
பத்தினியேசல்ல வாக்கருளும்
முத்திக்கு நிலையானபொருளும்
பாவையேயிங்கிருதடி மேவியேயேங்காதேயடி

ஒப்பாரி.

அங்கஜனும்ரதமேசி அமரேசன்முன்சென்று
அங்கஜனைப்பார்த்து அதிவிப்பாவிச்சிரலும்

அண்டர்பதிக்குபாம் ஐயனேகேளியபாம்
ஆலவிஷமுண்டகண்டனிவ னடியார்கள்தொண்டன்
அன்பாகயோகமுற்றார் முன்பாகவேவிபெற்றார்
அம்புதொடுத்துவிட்டால் தம்பிரான்யோகம்விட்டால்
அங்கஜனேசொல்லுகிறேன் இங்குநிந்தவானுலகம்
தப்புமினியுந்தன் தயவாலேதேவரெல்லாம்
ஆனசராசரமுங்கோனே பாருநைபுள்ளவரும்
அடுத்துகெடுக்குமெத்தன் ஆனசக்திதானந்தன்
ஆதிசதாசிவனார் சோதியேதற்பரனார்
அவர்மேல்கணைதொடுக்க யெவராலுமாகாதுகெடுக்க
அற்பமலரைவிட்டால் கெர்ப்பம்கலங்கிகெட்டார்
ஆவதால்நான்போக யாகாதயங்குமேயுசு
கோதண்டராமன் குமாரனேமன்மதனே
யுன்னைதவிர யொருவரில்லையிப்புவியில்
முன்னேநீசென்று முக்கண்ணனைக்கண்டு
தவத்தைதருகேத்து தான்வரவேவங்கிநின்றார்
அப்போதுமன்மதனும் ஐந்துகணையுடனே
கைலாயம்தேடி கடவுள்முன்னேவந்துநின்று
சந்திக்கிமூர்த்தி நாடிவணங்கிநின்றார்
தக்கிகணேசனையும் தானுமேபணிந்துநின்று
போற்றிசெய்தேநின்று மூர்த்திஈசன் தனைப்பணிந்து
பொழிநிறைபேசோகு முல்லைமுழுகுதமல்லி
புறவிதழ்தாமரை கறுமலர்பஞ்சகணை
பூட்டிபயக்தாவிழுந்து காட்டிநெஞ்சைகுறித்து
பூமலர்கள்துதிக்க காமன்கணைவிடுக்க
போசியோமலர்களொட்டு பொருந்தியேகிஷ்டைவிட்டு
போவெனஞானநிஷ்டை ஆவெனகாமசேஷ்டை
பூசலுண்டாகத்திறல் பாசமுண்டாகிமனம்
புத்திமயங்கிநின்று அத்தன்ஈசன்ஆவென்று
புனிதன்மனதுகொத்து தனதுகண்திறந்து
போக்குமேமுன்னேநின்ற பார்க்குமுன்னேயணங்கன்
பூதன்தன்தேருடனே யேந்தும்வில்காணியுடன்
[illegible]மணிஜோடிப்போடுமூண்டதணலாயெரிய
புண்ணியனார்முன்பாக மண்ணில்விழுந்தார்காண்
சாம்பலாய்ஆனார்காண் பாம்பணிவோர்கண்ணாலே

ரதி புலம்பும் ஒப்பாரி.

ஈஸ்வரன் மன்மதனை எழுப்புகிறது.

ஐயோசிவனேயென்று அலறியேபஞ்சணையில்
குப்புறமுறையோவென்று குதித்தடித்துவிழு
சொல்லியும்கேளாமல் சேர்ந்துவெதுத்தீரோ
இந்திரன்சொல்படியால் எதிர்த்தீரோ ஈசன் கண்ணால்
தேவன்தனைப்போற்றி மாவண்டுநாண்யேற்றி
சிவன்மேல்கணைதொடுக்க அவன்விழிதிறக்க
செந்தணலில்பட்டுமதன் வெந்துவிடக்கண்டேதன்
செய்கைதனைமறந்து மெய்யாய்மண்ணில்விழுந்து
செவ்வாய்பதறிசோர்ந்து எவ்வாறாளிருந்து
செம்மடைவேண்மதனே தாமோதரன்மகனே
இக்குஅற்றுபாவிருத்தம் தாங்கமுடியானவருத்தம்
தங்கமுடியோன்வரனே செங்கரும்புவில்தாரனே
அலைகடல்மாசேர்மனே இலைமதனிசோதனே
தேவரும்மைவிட்டு பூமிதனிலேகெட்டு
சித்தம்கலங்குதையோ சத்தியமாகும்பொய்யோ
செந்தணலிறபட்டாயோ உந்தனுயிர்விட்டாயோ
தேவர்செய்தகாரணமோ சிவர்செய்தகாரணமோ
தேரேன்மனதுசோர்ந்து பாராய்மனமுவந்து
செய்யமொழிகூறுமோ கைப்பெண்ணைபாராயோ
தேசத்திலேயலைந்து ஏசப்படவும்வந்து
செய்தேனோதீவினைகள் வைதேனோபாவிமகன்
தெரிவைபடைமாரா கெதியாருமோதீரா
தெருவிலலைவேனோ அதிவருந்தலைவேனோ
சித்தசனேயென்றுரைத்தாள் உத்தமிபெண்ரதியாள்
மஞ்சளிழந்தேன் மாமலரும்தானிழந்தேன்
தாலியிழந்தேன் தனிகூறைதானிழந்தேன்
வாயிலடித்து வண்ணசிலைமேல்விழுந்து
வில்லுபெசித்ததே விரம்குறைந்ததோ
பச்சைநிறமேனி பழுதுமடைந்ததோ
ஒண்டிபாசாணிருக்க உலகம்பொறுக்காது
குழம்பினையில் அடியாள்விழுவேனே

என்றுமேவோடி யேங்கியழுகும்போது
பாங்கிகளைத்தானழைத்து பரமசிவனிடம்சென்று
கண்டுவணங்கிக் கீழாகத்தான்விழுந்து
கோபமுடன்பேசி குறைசொல்லித்தானழுது
என்கணவன்மன்மதனை யேன்விழியா[illegible]யெரித்தீர்
எழுப்பித்தரவேணுமென்று யேங்கியழுதுநின்று
ஏங்கியேதெண்ட[illegible]ங்கியேயீசனுக்கு
மனதுமிரங்கி மகளேவாவென்றுசொல்லி
என்னிடமாய்வந்து யிப்படிசெய்[illegible]தல்
கண்ணினுலெரித்தேன் கணையேவ[illegible]மன்மதனை
யெழுப்பிதாரேனென்று யெழுந்துமேயீஸ்வரனும்
கெங்கைதனைத்தெளித்து கிளறியேசாம்பலைத்தான்
லிங்கமாய்பிடித்துவைத்து தீபதூபங்கொடுத்து
எரிந்தமதனை யெழுப்பிதென்றல்தேரோடு
அனங்கனெனும்நாமத்தை யன்புடனேகொடுத்து
உன்தனுக்குதானே உருவாயிருப்பானென்று .
இந்தவுலகத்தில் யிவனேயரூபியென்று
ஈசனும்சொல்லி யிடையேரிதானிருக்க
மதனும்ரதியும் மகிழ்ச்சியுடன்தான்பணிந்து
பூதென்றல்தேரேறி போனார்கள்புஷ்பமாரிபெய்ய

மங்களம்.

அச்சாமேசி என்ற மெட்டு.

தேவிதேவமங்களம் தெரிந்துசொல்வதேதகவும்
அதேதகலம் நற்குலம்
சேவடிதாருமே [illegible]ளதரித்தவனே
சிறுவன்யான் சிறுவன்யான் சிறுவன்யான்
சிறுவன்யானே (தே)

மன்மதனும்ரதியும் மகிழுடன்வாழவே
மானகர் மானகர் மானகர்
மானகர்போம் (தே)

கற்றோரும்உற்றோரும் கருதியச்சிவிட்டோரும்
கருணையே கருணையே கருணையே
கருணையேதான் (தே)

எழுதினோர்பிழைபொறுத்து பிசையஆசிர்வதித்து
யேற்றுவீர் யேற்றுவீர் யேற்றுவீர்
யேற்றுவீரே (தே)

மன்மத சரித்திர மென்னும்

காமதகன திருப்புகழ்ச்சிந்து

காவடிச்சிந்து வர்னமெட்டு

முற்றிற்று.

ஸ்ரீமத் ராமாயணத் திருப்புகழ்

இமிடேஷன் பதிப்பு.

புத்தக அறிக்கை.

திருச்சிராப்பள்ளி ஜில்லா, ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமி கோனார் அவர்களால் இயற்றிய இராமாயணத் திருப்புகழ்ச்சிந்து, காவடிச்சிந்து, வர்ணமெட்டு என்னும் எமது அபூர்வ புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்குத் தெரியப் படுத்துவது யாதெனில்:—

நண்பர்காள் மேற்கூறிய இராமாயணத் திருப்புகழ் காவடிச் சிந்து என்னும் புத்தகத்தை ஷை கிருஷ்ணசாமிக் கோனார் அவர்களால் இயற்றப்பட்டு, பெரம்பூர் - ஆறுமுக முதலியாராகிய என்னால் சுமார் ஆறு பதிப்புகள் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டு, உலகமெங்கும் பிரசித்தியடைந்து, யாவராலும் புகழப்பெற்று வருவதும், இதற்கென கிடைக்கப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்களின் பெருமையும் யாவருக்கும் தெரிந்தவிஷயமே; ஆகையால் எமது வியாபாரத்தின் பொருமையாலும், ஷை கோனார் அவர்களின் கவியை பங்கப்படுத்தவும் ஓர் எண்ணங்கொண்ட சிலர் புதிதாக ஸ்ரீமத் ராமாயண திருப்புகழ் என ஓர் "இமிடேஷன்" புத்தகத்தை அச்சிட்டு எமது வியாபாரத்தைக் கெடுக்க உத்தேசித்து அசுத்தமான பதிப்பாக அச்சிட்டு விற்று வருகிறார்கள். ஆகையால், ஷை இராமாயணத் திருப்புகழ் புத்தகத்தை வாங்க விருப்பமுள்ள நண்பர்கள் ஷை புத்தகத்தின் டைட்டல் பேஜியின்மேல் ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமி கோனார் இயற்றியதுதானாவென பார்த்து வாங்குவீரென நம்புகிறேன்.

இப்படிக்கு,

பெரம்பூர் - ஆறுமுக முதலியார்,

நெ. 4, பெருமாள் கோவில் தோட்டம் 2-வது சந்து

சென்னை.

ஆதன புத்தகங்கள்.

ஜெயங்கொண்ட சோழபுரம் வா-கிருஷ்ணசாமிகோனர் இயற்றிய
ஸ்ரீமகாபாரதம், ஆதிபர்வம், சபாபர்வம் அடங்கிய முதற்பாகம்

திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு. 40-சவிட்டுள்ளது	0 8 0
ஸ்ரீமத் ராமாயணம் பிரதுகா பட்டாபிஷேகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 40-சவிட்டுள்ள புஸ்தகம்	0 8 0
ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திராபஹரணம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு விலை 1-க்கு	0 2 0
இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0 2 0

திருசிரபுரம்- கோவிந்ததாஸ் அவர்களியற்றிய

ஸ்ரீராமாயண பக்திரஸக் கீர்த்தனைகள். ஆதன இந்துஸ்தான், பார்ஸ், தில்லானா, டோமரி அடங்கியதவிலை அணா	0 5 0

கும்பகோணம் புத்தகஷாப்பு கே. வி. கதிர்வேல் பிள்ளை இயற்றிய

கந்தனூர் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0 2 0
சாவித்திரி- சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து 1-பாகம்	0 2 0
ஷை சாவித்திரி- சத்தியவான் 2-பாகம்	0 2 0
மயில்ராவண சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0 2 0
வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ்க் காவடிச்சிந்து	0 2 0
காமதகன திருப்புகழ்க் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0 2 0
இட்டிலிக்கும் உப்புமாவுக்கும் சண்டை	0 1 0
சுவாமிமலை S. பொன்னம்பலம் பிள்ளை இயற்றிய திருஏரகமென்னும் சுவாமிமலை சுவாமிநாதஸ்வாமி காவடிச்சிந்து	0 2 0
சுவாமிமலை கு. கு. முத்தையா பிள்ளை இயற்றிய பொய்சொல்லாபுனிதனெனும் சத்தியஅரிச்சந்திர திருப்பு-கா-சிந்து	0 2 0
பஞ்சரத்தின திருப்புகழ் மூலமும் உரை.	0 8 0
ஜமீனை ஜெயித்து சிம்மாசனம் ஏறிய ஓர் அரசகுமாரன் சரித்திரம் என்னும் சித்திராபுத்திரன் கதை அணா	0 6 0
ஸ்ரீமத் பசர்தாமன்பேரில் பாரீஸ் இந்துஸ்தான்வர்ணமெட்டு பஜனை நாவளிகள், முதல்பாகம் 1-க்கு விலை அணா	0 2 0
தாடகைசம்மாரம் டிராமா 1-ம் பாகம்	0 2 0
சீதாகல்யாணம் பரசுராம பங்கம் டிராமா 2-ம் பாகம்	0 2 0
வழிநடை உப்புமாவு பாட்டு	0 1 0
சம்மந்திக்கும் மாப்பிள்ளைக்கும் பேசல்	0 2 0
நீலிக்கதை 0 4 0 பண்டரி கீர்த்தனை	0 4 0
ஆறுபாவை ஒக்கபிலேரி அணா	0 4 0
சீகாளத்தி புராணம் வசனம் ஐதிக படங்களுடன்	0 6 0

☞ இதில் 8 அணாவுக்கு மேற்பட்ட தொகைக்கு வி. பியில் அனுப்பப்படும்.

விலாசம்—பெரம்பூர்- ஆறுமுக முதலியார்.

நெ. 2-வது சந்து பெருமாள்கோவில் தோட்டம்,

சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

நூ தெ

ஜெயங்கொண்ட சோ
ஸ்ரீமகாபாரதம், ஆதிப
திருப்புகழ் காவடிச்சி
ஸ்ரீமத் ராமாயணம் பாது
காவடிச்சிந்து வர்ணமெட்டு 4
ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திர
ம் காவடிச்சிந்து வர்ணமெட்டு
இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்

திருசிரபுரம்- கோவிந்ததாஸ

ஸ்ரீராமாயண பக்திரஸக் கீர்த்தனங்கள்.
ஜாரீஸ், தில்லானு, டோமரி அடங்கியது

ம்பகோணம் புத்தகஷாப்பு கே.வி. கதிர்வே

னர் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து			
த்திரி- சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து 1-பாகம்	0	2	0
ஷை சாவித்திரி- சத்தியவான் 2-பாகம்	0	2	0
மயில்ராவண சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ்க் காவடிச்சிந்து	0	2	0
காமதகன திருப்புகழ்க் காவடிசிந்து வர்ணமெட்டு	0	2	0
பவழக்கொடி திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	12	0
இட்டிலிக்கும் உப்புமாவுக்கும் சண்டை	0	1	0
ராம நாம பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ண மெட்டு	0	3	0

சுவாமிமலை S. பொன்னம்பலம் பிள்ளை இயற்றிய திருஏரக
மென்னும் சுவாமிமலை சுவாமிநாதஸ்வாமி காவடிச்சிந்து 0
சுவாமிமலை கு. கு. முத்தையா பிள்ளை இயற்றிய பொய்சொ
லாபுனிதனெனும் சத்திய அரிச்சந்திர திருப்பு-கா-சி
பஞ்சரத்னை திருப்புகழ் மூலமும் உரை.
மன்னை ஜெயித்து சிம்மாசனம் ஏறிய ஓர் அரசகுமா
சித்திரம் எனனும் சித்திரபுத்திரன் கதை

...ளைமெட்டி
...லை அறை 0 2 0
...ம் பாகம் 0 2 0
...ம் பாகம் 0 2 0
... 0 1 0
...ை 0 2 0
...பாட்டு 0 1 ...
...ளையும், சத்
...சை திருப்புக
..., கிலை, செகாம கக்
...ரதிகள் வர்ச்சிக்குரிய
...ருச்சர் பதிவுடும் அடங்கி
0 8 0
0 1 0
...ாயல்லை 0 4 0
...னி மந்திரம் இரண்டு பாகம் அட
0 1 ...
மெய்ஞ்ஞா... கேள் என்னும் சதாசிவசன்னி 0 1 ...
...கதை 0 4 0 பண்டரி மேத்தரிவ 0 ...
ஆருமோனை தக்கரிவேளி 0 4 ...
கவிச்சுத் தாவிகட்டினகதை 0 4 ...
சௌந்தி புராணம் வசனம் ஐதிக படங்களுடன் 0 6 0
இதில் 8-அணவுக்கு மேற்பட்ட தனைக்கு வி.பி. யில் அனுப்பப்படும்.

விலாசம்:—பெரம்பூர்-ஆறுமுக முதலியார்,
நெ. 4. பெருமாள்கோவில் தோட்டம் 2-வது சந்து,
சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.